**1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திருமதி.R.L.பிரியதர்ஷினி, B.A., B.L..,**

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

1 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ)

திருநெல்வேலி

2025 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ம் நாள் வியாழக்கிழமை

**இ.ம.எண்.3/2025 அதன் அ.வ.எண்.89/2025**

A.சேக் முகம்மது ... மனுதாரர் / 3 ம் பிரதிவாதி

–எதிர்–

A. சக்திவேல் ... எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனு என்முன்பாக 25.11.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.ஞானியார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.நாகராஜன் அவர்கள் போதிய வாய்ப்பளித்தும் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, அசல் வழக்கில் 16.04.2025 அன்று மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக் கோரி, மனுதாரரால் கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151 சி.பி.சி.ன் பிரகாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மனுதாரர் தரப்பில், அசல் வழக்கின் நீதிமன்ற அழைப்பாணையை மனுதாரர் பெற்றுக் கொண்டதாகவும், ஆனால் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாமல் சிரமப்பட்டு வந்ததால், வழக்கறிஞரை நியமித்து 16.04.2025 ம் தேதியில் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும், எனவே, மனுதாரருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும்,

மேற்படி தவறுகை வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், இம்மனுவினை அனுமதிக்காவிடில் மனுதாருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்றும், எனவே, மேற்படி ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து வேண்டுமென கட்சி செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில், எதிருரை எதுவும் தாக்கல் செய்யாமல் தோன்றாத்தரப்பினாராக்கப்பட்டுள்ளார்.

3) அசல் வழக்கானது, 1ம் பிரதிவாதி, 2,3ம் பிரதிவாதிகளுடன் சேர்ந்து உற்பத்தி செய்த 11.06.2024ம் தேதிய கிரைய ஆவண எண்.3705/2024 சட்டப்படி இல்லாநிலையது என விளம்புகை பரிகாரம் கோரி எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனுதாரர் ஆஜராகாததால், மனுதாரருக்கு எதிராக 16.04.2025ம் தேதியில் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில், உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்று கூறப்பட்டுள்ளது. அசல் வழக்கானது 2ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக நிலுவையில் உள்ளது. எனவே, இம்மனுவினை அனுமதிப்பதினால் எதிர்மனுதாரருக்கு எந்தவித ஈடு செய்ய முடியாத இழப்பும் ஏற்படபோவதில்லை என்றும், அதேசமயத்தில் இம்மனு அனுமதிக்காவிடில் மனுதாரரால் அவர் தரப்பு வழக்கினை நீதிமன்றத்தில் முன்னிறுத்த வாய்ப்பு இல்லாமல் போய்விடும் என்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரருக்கு அவரது தரப்பு வழக்கை நிரூபிக்க ஒரு இறுதி வாய்ப்பு வழங்கும் விதத்திலும், நீதியின்பால் நலன் கருதியும் இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால்

கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Uploaded on 11.12.2025
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2025.12.11 16:19:23 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ)
திருநெல்வேலி

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்</u>- இல்லை
<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்</u>- இல்லை

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL

Uploaded on 11.12.2025
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2025.12.11 16:19:27 +0530

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ)
திருநெல்வேலி

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி

**<u>இ.ம.எண்.3/2025 அதன்</u>**

**<u>அ.வ.எண்.89/2025</u>**

சீரான / வரைவு உத்தரவு
11.12.2025